மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# A History of Enathias as Shown by Saivism

**Dr. N. Deeparani**

**Assistant Professor, Department of Tamil, Vels Institute of Science, Technology and Advanced Studies, Chennai, India**

Manuscript ID : **MT127A0099**
Volume : **2**
Issue : **4**
Month : **December**
Year : **2022**
Received: 22.10.2022
Revised: 07.11.2022
Accepted: 21.11.2022
Published: 03.12.2022
Pages : 228-240
DOI: 10.5281/zenodo.7375306

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

**ABSTRACT:**

In the sangam period there is no high or no in the discrimination of worker kurinchi, marutham, neithal, paalai have being identify has labour based on they work. A type of marautirs engaged in warfare among the industrial population called enathi. The pandiyas and gohars gave titles to the warriors to excelled as commander, pandiya warriors were given the title of pandyaenathi. And chola warriors were given the title of "chohiya enathi" Enathrinayan set of like a warrior along with him, the bulls trained in swordsmanship went to the field as swordman and later enathis are the tribe living in Tamilnadu the called themselves as dark people and now there are differentiated by language. However they were proudly takes that title given to them. Various migration may have taken place due to change of time and change of rule of kings.

**KEYWORDS:**

Discrimination - Categories of People, Marautirs – Predator, Warriors - Ancient Greece, Swords - Military Power, Migration - One Region to Another

# சைவம் காட்டும் ஏனாதியர் வரலாறு

**முனைவர் நா. தீபாராணி,**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை, இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**சங்க காலத்தில் தொழிலாளி குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற பாகுபாடுகளில் உயர்வோ இல்லையோ இல்லை. ஏனாதி எனப்படும் தொழில்துறை மக்களிடையே போரில் ஈடுபட்ட ஒரு வகை மராத்தியர்கள். பாண்டியர்களும் கோஹர்களும் தளபதியாக சிறந்து விளங்கும் வீரர்களுக்கு பட்டங்களை வழங்கினர், பாண்டிய வீரர்களுக்கு பாண்டியநேதி என்ற பட்டம் வழங்கப்பட்டது. சோழ வீரர்களுக்கு "சோழிய ஏனாதி" எனத் திரிநயன் பட்டம் வழங்கப்பட்டது, அவருடன் சேர்ந்து வாள்வீச்சு பயிற்சி பெற்ற காளைகள் வாள்வீரனாக களம் இறங்கி, பின்னர் ஏனாதிகள் தமிழகத்தில் வாழும் பழங்குடியினர் இருளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். மொழியால் வேறுபடுத்தப்படுகின்றன. இருப்பினும், தங்களுக்கு வழங்கப்பட்ட அந்த பட்டத்தை அவர்கள் பெருமையுடன் ஏற்றுக்கொண்டனர். கால மாற்றத்தாலும், மன்னர்களின் ஆட்சி மாற்றத்தாலும் பல்வேறு இடப்பெயர்வுகள் நடந்திருக்கலாம்.**

## கருச்சொற்கள்

**மக்களின் பாகுபாடு - பிரிவுகள், மருத்தியர்கள் - வேட்டையாடும், வீரர்கள் - பண்டைய கிரீஸ், வாள்கள் - இராணுவ சக்தி, இடம்பெயர்தல் - ஒரு பகுதிக்கு மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்தல்**

## முன்னுரை

சங்க காலத்தில் தொழில் சார்ந்த குடிகள் காணப்பட்டனர். அக்குடிகளின் பதிவுகளை இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். வேட்டுவர் குடி (நற்றிணை, 189:7) ஆயர்குடி (தொல்காப்பியம், பொருளதிகாரம், அகம்.23), கானவர் குடி (நற்றிணை, 65:6), உழவர் குடி (அகநானூறு, 30:8), பரதவர் குடி (அகநானூறு, 10:10) நுளையர் குடி (அகநானூறு 366:11), எயினர் குடி (அகநானூறு, 79:14) மறவர் குடி (அகநானூறு, 35:6), குறவர்குடி (அகநானூறு, 13:4), கணியன்குடி (கலித்தொகை, 2-6), ஒளியர் (புறநானூறு, 23), பார்ப்பார் (புறநானூறு, 34-3), கோடியர் (புறநானூறு, 29), புலையார் (கலித்தொகை, 55-18), ஆறலைக் கள்வர் (பொருநராற்றுப்படை, 21), பொருநர் (புறநானூறு, 18-1) முதலான பல குடிகளைச் சங்க இலக்கியத்தில் காணலாம்.

இக்குடிகளைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணை அடிப்படையில் தொழிற் குடிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். இத்திணை சார் தொழிற் குடியின் பாகுபாட்டில் உயர்வு தாழ்வு இல்லை. அந்தந்த திணைக் கேற்பவே தொழில்முறை அமைந்திருந்தது. அதாவது, நிரை கவர்தல், மீட்டல், பாதீடு செய்து கொள்ளுதல் என ஒரு குழுவாக ஒழுக்கமாக நடைபெற்றுள்ளது. இக்கருத்தைப் பார்க்க இது வேட்டைச் சமூகத்தின் தொடர்ச்சி என்பதனை அறிய முடிகின்றது. தொழில் குடிகளில் போர்த் தொழில் செய்யும் மறவர்களில் ஒரு வகையினர் 'ஏனாதி' எனப்படுகின்றனர்.

'ஏனாதி' என்பது சேனாதிபதியைக் குறிக்கும் சங்ககாலத் தமிழ்ச்சொல். போரில் மதிலின் மீது ஏறுதல் 'ஏணி' எனப்படும். இதனைத் தொல்காப்பியம் 'மடையமை ஏணிமிசை மயக்கம்' எனக் குறிப்பிடுகிறது. இது உழிஞைத் திணையின் துறைகளில் ஒன்று.

**"குடையும் வாளும் நாள்கோள் தோன்றி**
**மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைசிஇச்**
................................
................................
**தொகைநிலை என்னும் துறையொடு தொகை இ**
**வகை நான் மூன்றே துறையென மொழிப"**

**(தொல்காப்பியம், புறம், 69)**

இத்துடன் 'ஏ' என்னும் சொல் அம்மைக் குறிக்கும் ஏ + ஆதி = ஏனாதி. இதில் 'ன்' என்பது சாரியை. அதாவது, ஆ + நிரை = ஆனிரை என வருவதை இதனோடு ஒப்பிட்டு உணர்ந்து கொள்ளலாம்.

புறப்பொருள் வெண்பாமாலையில், 'உழிஞைத் துறையில்' ஏணி நிலையைக் கூறுமிடத்து,

**"தொடுகழன் மறவர் துன்னித் துன்னார்**
**இடுசூட் டிஞ்சிபி னேணிசாத் தின்று"**

## கொளு

மதிலைக் கடக்க ஏணி சாத்திப் போரிடுதல்.

**"கற்பொறியும் பாம்புங் கனலுங் கடி குரங்கும்**
**விற்பொறியும் வேலும் விலக்கவும் பொற்புடை**
**பணி நடைப் புரவிப் பல்களிற்றார் சாத்தினார்**
**ஏணி பலவு மெயில்"**

மதிலின் மீது கல் எரியும் பொறிகளும், கடிக்கும் பாம்புகளும், எரியும் தீப்பந்தங்களும், கடிக்கும் குரங்குகளும், ஆளில்லாமல் தானே எய்து தாக்கும் வில் பொறிகளும், வேல்களும் இருக்கும். அவைகள் தாக்கும் போது, குதிரையிலும் களிற்றிலும் வந்த மறவர்கள் மதிலின் மேல் ஏணியைச் சாத்தி, குறி வைத்துத் தாக்கினர் என்று கூறுவதன் மூலம், 'ஏணியைச் சாத்தி குறி வைத்துத் தாக்கும் போர்முறையைப் பின்பற்றிய வீரர்களை', 'ஏனாதி' எனக் கூறியிருக்கலாம்.

## அகராதி கூறும் பொருள்

'ஏனாதி' என்பதற்கு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் லெக்சிகன் கூறும் பொருட்களைப் பின்வருமாறு காணலாம்.

1. ஆழி தொட்டான் (P.253)
   ஆழி தொட்டான் ali-tottan General of an army as one wearing en ati motiram * ஏனாதி மோதிரந் தரித்த சேனாபதி (சீவக சிந்தாமணி 2167)
2. ஈழக் குலச் சான்றார் (P.382)
   ila - k - kula - c - canrar - Division of the canar caste சான்றார் குல வகுப்பு (பெரியபு - ஏனாதி. 2)
3. ஏனாதி enati (P.574)
   ஏனாதி enayi; ncdrob. senadi.
   An ancient title conterred. மந்திரி.
   சோழிக வேனாதி தன்முக நோக்கி, மணி, (22, 205)
   படைத் தலைவன், மறவன், ஓர் இலேகியம்.
4. ஏனாதி enati (P.574)
   ஏனாதி enati - நாவிதன் (பிங்)
   Name or a division among Shanars. சாணாரில் ஒரு வகுப்பு.

5. ஏனாதி நாத நாயனார் enatinatanayanar (P.575)

ஏனாதி நாத நாயனார் enatinatanayanar 63 அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர். (பெரியபுராணம்)

என்று அகராதிகள் பொருள் கூறுகின்ற, 'ஏனாதி' என்பவர்கள் போர்ப்படை வீரர்கள் என்று சங்க இலக்கியங்களும் சான்று தருகின்றன.

## சங்க இலக்கியத்தில் ஏனாதி

வில்லான்மையில் சிறந்தவன் என்னும் பொருளில் இந்த, 'ஏனாதி' என்னும் பட்டம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் ஏனாதி திருக்கிள்ளி, சோழிய ஏனாதி, திருக்கண்ணன் ஆகியோர் ஏனாதி பட்டம் பெற்ற படைத்தலைவர்கள் (புறநானூறு 167, 394, 174) என்று கூறுகின்றது.

**"போரில் வெல்லும் கழல்**
**விரைந்து செல்லும் குதிரை**
**கொண்ட கிள்ளி!**
**நீ**
**போரைக் கண்டால் படையை**
**விலக்கிக் கொண்டு முன்னேறி வெற்றி**
**பெறும்போது வாளால் காயம்பட்டு**
**ஆறிய தழும்புடன் கண்ணுக்கு**
**இனியவனாக இல்லை**
**கேட்பதற்கு இனியவனாக இருக்கிறாய்**
**உன் பகைவரோ**
**உன்னைக் கண்டதும் புறமுதுகு காட்டி**
**ஓடிக் காயமில்லாத உடம்போடு**
**பார்ப்பதற்கு இனிமையாக உள்ளனர்.**
**ஆனால், கேட்பதற்கு இனிமையாக**
**இல்லை.**
**அதனால்**
**நீயும் ஒன்றில் இனியவன்**
**உன் பகைவரும் ஒன்றில் இனியவர்**
**இருவரையும் ஒப்பிடும்போது சமந்தானே.**
**அப்படி இருக்கும்போது உலகம் உன்னை**
**மட்டும் கண்டு வியந்து போற்றுகிறதே.**
**ஏன்"** புறநானூறு - 167)

என்று ஏனாதி திருக்கிள்ளியைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது. அரசனால் வழங்கப்பட்ட படைத்தலைவன் என்ற விருது பெயர் ஆகும்.

ஏனாதி என்பது படைத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு, 'பட்டப் பெயர்' என்பதனை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

மேலும், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் புறம் 394 பாடலில் ஏனாதி திருக்குட்டுவன் பற்றிப் பாடியுள்ளார்.

புறம் : 394, "நான் காலை வேளையில் என் தடாரிப் பறையை அறைந்து, சோழன் ஏனாதி திருக்குட்டுவனின் தந்தையின் புகழை வஞ்சித்துறைப் பாடலாகப் பாடினேன்". என் பாட்டைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த திருக்குட்டுவன், பெரிய யானை ஒன்றை எனக்குப் பரிசாக அளித்தான். அந்த யானையைக் கண்டு அஞ்சி நான் அதைத் திருக்குட்டுவனிடம் திருப்பி அனுப்பி விட்டேன். தான் அழைத்த யானை என் தகுதிக்கு ஏற்ற பரிசு இல்லை என்று நினைத்து, முன்னர் அளித்த யானையை விடப் பெரிய யானையைப் பரிசாக அனுப்பினான். இனிமேல், நான் எவ்வளவு வறுமையால் வாடினாலும் திருக்குட்டுவனிடம் பரிசு பெறச் செல்ல மாட்டேன். புலவர்களே, நீங்களும் அவனிடம் பரிசு பெறும் எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள், என்று ஒரு பாணன் கூறுவதாக, வஞ்சப் புகழ்ச்சியாக, கோனாட்டுப் புலவர் பாடியுள்ளார்.

இப்பாடலின் மன்னன் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் சேர நாட்டின் ஒரு பகுதியாகிய குட்டநாட்டு அரசர் குடியில் தோன்றியவன். இவன் சோழ அரசன் ஒருவனுக்குப் படைத்தலைவனாக இருந்ததால் 'சோழிய' ஏனாதி என்ற பட்டத்தைப் பெற்றான்.

**"சிலையுலாய் நிமிர்ந்த சாந்து படு**
**மார்பின்**
**ஒலிக்கதிர்க் கழனி வெண்குடைக்**
**கிழவோன்**
**வலி துஞ்சு தடக்கை வாய்வாள்**
**குட்டுவன்"** **(புறநானூறு : 394)**

இதுபோன்று மற்றொரு படைத்தலைவனான, 'ஏனாதி திருக்கண்ணன்' பற்றிப் பின்வருமாறு காணலாம்.

## மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்

மலையமான் திருமுடிக்காரியைப் போன்று ஒரு வள்ளலாய்த் திகழ்ந்தான். இவன் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு முள்ளூர் மலையை அரணாக வைத்து, திருமுனைப்பாடி நாட்டை ஆண்டதாக, இம் மன்னனைப் பாடிய பெரும்புலவர் நப்பசலையார் புறநானூற்றின் 174 ஆம் பாடலைப் பாடியுள்ளார். இவன் சோழ மன்னனின் படைத்தலைவனாய்ப் பணிபுரிந்ததால் 'சோழிய ஏனாதி' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதனை, சங்கப் பாடல்களின் வழி பின்வருமாறு காணலாம்.

சோழன் ஒருவன் நாடு இழந்து, பகைவர்க்கு அஞ்சி, ஓடி வந்து மலையமான் திருக்கண்ணனிடம் அடைக்கலம் புகுந்தான். இவன் அவனைத் தன் முள்ளூர் மலையரணில் வைத்துக் காத்து வந்தான். தக்க சூழ்நிலை உருவாகியதும், மலையமான் சோழனைச் சோழ நாட்டிற்கு அழைத்துச் சென்று, பகை களைந்து, மீண்டும் அரியணையில் ஏற்றினான். இப்பாடலில் புலவரின் ஒப்புமை சிறப்பானதாகும். 'அரக்கர்களால் கதிரவன் மறைக்கப்பட, உலகம் இருள் சூழ்ந்து வருந்திய போது, திருமால் கதிரவனை மீட்டு, உலகிற்கு ஒளி உண்டாகியது போன்று, பகைவரால் சோழன் விரட்டப்படச் சோழநாடு கலங்கியபோது, மலையமான் திருக்கண்ணன் மன்னனை மீட்டுக் கொணர்ந்து, சோழ நாட்டை மகிழ்வித்தான்' எனப் புகழ்ந்துள்ளார்.

**"அணங்குடை அவுணர்**
**கணம் கொண்டு ஒளித்தெனச்**
**சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது,**
**இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து**
**இடும்பை கொள் பருவால் தீரக், கடுந்திறல்,**
**அஞ்சன் உருவன் தந்து நிறுத்தாங்கு,**

.......................

.......................

**செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட**
**எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை**
**அருவழி இருந்த பெருவிறல் வளவன்.**

.......................

.......................

**இருநிலம் நெளிய ஈண்டி**
**உரும் உரறு கருவிய மழை பொழிந் தாங்கே!"** (புறம் : 174)

இக்குறுநில மன்னன் மலையமான் திருமுடிக்காரியின் மகன் என்று கூறுவாரும் உள்ளனர். இம்மன்னன் சோழர்களுக்குத் துணையாகப் போர் புரிந்ததால் 'ஏனாதி' என்று பட்டம் பெற்றான் எனப் பலர் கூறுகின்றனர். மேற்கூறிய பாடலில், சோழர் படைக்கு இவன் உதவி புரிந்த தன்மையை அறிய முடிகின்றது.

தொல்காப்பியமும் போர் வீரர்களுக்குத் தருகின்ற பட்டங்களைப் பற்றிப் பதிவு செய்துள்ளார். அன்ன பிற எனும் பகுதியில் அவை, பின்வருமாறு,

**ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான்,**
**வண்ணத்தான், பிறன், பிறள், பிறர்,**
**மற்றையான், மற்றையாள்,**
**மற்றையர், - தொடக்கூத்தன.**
**"ஏனாதி திருக்கிள்ளி**
**சோழன் நலங்கிள்ளி"**
**இவற்றில் ஏனாதி, சோழன் என்பன சிறப்பு பெயர்கள்.**
**இவற்றை இயற்பெயருக்கு பின்னால் கூறுவதில்லை.**

**(தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா. 41)**

இத்துடன், 'ஏனாதி' என்னும் சொல் தமிழ் வேந்தர்கள் படைத்தலைவருக்கு வழங்கும் பட்டப்பெயர் ஆகும். ஏனாதி, காவிதி முதலிய பட்டங்கள் தந்தும் நாடும் ஊரும் தந்தும் சிறப்புச் செய்தல் என்று தொல்காப்பியர் பொருள் அதிகாரத்தின் 63 வது நூற்பாவிலும் உரையெழுதிய என நச்சினார்க்கினியரும் கூறியுள்ளார்.

சான்றாக, ஏனாதி திருக்கிள்ளி (புறநானூறு : 67), மலையமான் சோழிய ஏனாதி (புறநானூறு : 174), சோழிய ஏனாதி திருக்குட்டுவன் (புறநானூறு : 394) ஏனாதிபாடி (கலித்தொகை 81 : 18) காண்க. காவியப் புலமையும் பெற்றுச் சிறந்தனர் ஏனாதி என்பதற்கு, பாண்டிய ஏனாதி நெடுங்கண்ணனார் ஒரு சிறந்த சான்று ஆவார். சங்க இலக்கியத்தில் அகநானூற்றின் 373, குறுந்தொகை 156 வது அகத்திணைச் சார்ந்த பாடல்களைப் பாடியவர் பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் ஆவார். இப்புலவர் பாண்டிய மன்னரால் ஏனாதிப் பட்டம் வழங்கப்பட்டவர். மதுரை ஆட்சி செய்த மாறன் சடையன் என்பவன் எட்டி என்னும் வீரனுக்கு ஏனாதிப் பட்டம் வழங்கினான்.

பாண்டியன் மாறனுக்கும் சேரனுக்கும் இடையே பகை மூண்டது. மலை நாட்டின் மீது படையெடுத்தான் மாறன் பாண்டிய ஏனாதி படைத்தலைமை பூண்டான். மலை நாட்டு மன்னனது அருவியூர்க் கோட்டையை முற்றுவிட்டான். அப்போரில் பாண்டி ஏனாதி பட்டம் பெற்றான். இச்செய்தியைப் பாண்டியர் வரலாறு என்னும் நூலில் (பக்கம் 86) நீலகண்ட சாஸ்திரியார் விரிவாகப் பேசியுள்ளார்.

படைத்தலைவர்களாக சிறந்து விளங்கிய போர் வீரர்களுக்குப் பாண்டியர்களும் சோழர்களும் பட்டம் தந்துள்ளனர். பாண்டிய வீரர்களுக்கு 'பாண்டிய ஏனாதி' என்றும் சோழ வீரர்களுக்கு, 'சோழிய ஏனாதி' என்றும் பட்டம் தந்து சிறப்பித்துள்ளனர். இச்செய்தியை மேற்கூறிய சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர்படைத் தலைவர்களாகவும் புலவர்களாகவும் சிறந்து விளங்கியவர்கள் 'ஏனாதி'யர்கள். சைவ சமயத்தைத் தழுவி, தன்னுடைய சிவநெறி பக்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். பக்தி இயக்க காலத்தில் இலங்கையில் இருந்து தன்னுடைய போர்ப் படைக்குப் பயிற்சிகள் அளிப்பதற்காக அழைத்துவரப்பட்டவர், 'ஏனாதி நாயனார்' ஆவார். இவர் சிறந்த போர்படைத் தலைவர் என்பதனையும் இவரது சிவபக்தியையும் பின்வருமாறு காணலாம்.

## ஏனாதி நாயனார்

**"வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலில்**
**தாழக் கதிர்ச்சாலி தாணோங்கும் தன்மையதாய்**
**வாழக் குடிதழைத்து மன்னிய அப் பொற்பதியில்**
**ஈழக் குலச்சான்றோர் ஏனாதி நாதனார்"**

(ப.எண்.3 : **பெரியபுராணம் விளக்கம், கி. வா. ஜகநாதன்**)

சோழமண்டலத்தின் எயினனூரில் ஈழக் குலத்தில் பிறந்தவர் ஏனாதி நாயனார். இவர் திருநீற்றின் மீது தீராத பக்தி கொண்டவர். ஏனாதி நாயனார் ஓர் சிறந்த வாள் வித்தை வீரர் ஆவார். அதனால், அவ்வாற்றலை பல மன்னர்களுக்குப் பயிற்றுவித்து வந்தார். அதன் மூலம் கிடைக்கும் செல்வங்களைச் சிவனடியார்களுக்கு உபசரிப்பு செய்து கொண்டு வந்தார்.

இச்சூழலில் வாட்படை பயிற்றும் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு, வாழும் காலத்தில் வாள் பயிற்சி பெற விரும்பும் அனைவரும் அவரிடம் சென்றனர். இதனால் இவரது தாய் வழி உறவினரான அதிசூரன என்பானும் அத்தொழில் செய்து வந்தான். அவனுக்கு வருமானம் குறைந்தது அதனால் ஏனாதிநாதர் மீது பொறாமை கொண்டு, அவர் மீது போர் தொடுக்கச் சென்றான்.

ஏனாதிநாயனார் போர்க்கோலம் பூண்டு ஏறு போல் புறப்பட்டார். அவருடன் வாள் பயிற்சி பயின்ற காளையர்களும் வாள் வீரர்களாகப் படை சூழ களத்திற்குச் சென்றனர்.

போர் ஆரம்பமானது. வில் வீரர்களும் வால்படை வீரர்களும் தன்னுடைய உயிரைப் பொருட்டாக மதிக்காமல் போர் புரிந்தனர். ஏனாதிநாதரின் வீரத்திற்கு முன்பு நிற்க முடியாமல் புறமுதுகு காட்டி ஓடினான் அதிசூரன். வெற்றி பெற்று வீடு

திரும்பினார் ஏனாதிநாதர். அதிசூரனுக்கு பகைமை உணர்வு மாறவே இல்லை. வளர்ந்து கொண்டே இருந்தது.

இந்நிலையில் அதிசூரன் சூழ்ச்சியால் மீண்டும் போர் புரிய ஏனாதிநாதரை அழைத்தான். அப்பொழுது, அவரை நேர் பாதையில் வெல்ல முடியாது என்று எண்ணி, அவரைக் கொல்லக் கருதினான். போர் நடக்க இடம், நேரம் பார்த்துக் கூறினான். அம்முடிவுக்கு ஏனாதி நாயனாரும் சம்மதித்தார்.

குறித்த நேரமும் நாளும் வந்தது. போர் புரியும் இடத்திற்குச் சென்றனர். அங்கே ஏனாதி நாயனார் அதிசூரனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். போர் தொடங்கியது. புலியைப் போல பாய்ந்து சண்டை செய்தார் ஏனாதி நாயனார். அதிசூரன் அவரின் வாள் வீச்சுக்குப் பயந்து, பதுங்கிப் பதுங்கி, ஒதுங்கி ஒதுங்கி, சண்டை செய்தான். அவர் தன் வாளால் உடலைக் கிழிக்கும் தருணம் தன்னுடைய உடலை மறைத்துக் கொண்டிருந்த கவசத்தையும் கேடயத்தையும் விளக்கினான். திருநீறு அணிந்த முகத்தைப் பார்த்த நாயனாரின் வீரம் பக்திக்கு அடிமையானது. அதிசூரன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். நாயனாரின் உயிர் பிரிந்தது.

இதன் மூலம் பக்தி இலக்கிய காலத்திலும் படைத்தலைவர், 'ஏனாதி' என்று அழைக்கப்பட்டனர் என்பதனைக் காண முடிகின்றது.

'ஏனாதி' என்பது வீரர்களுக்கு வழங்கிய சிறப்புப் பெயர் என்று மேற்கூறிய சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. பின்நாளில் சோழர்கள் வழங்கிய சிறப்பு பெயர்களே தனிக் குழுக்களாக அறியப்படுகின்றனர். பேரரசர்கள் தங்களின் ஆளுமைக்கு உட்பட்ட குறுநில மன்னர்களுக்கும், அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும் வழங்கிய பட்டங்கள் காலியங்கராயன், சேதிராயன், மழவராயன், நாடாள்வான் என்றும் பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் காடவராயன் - காடவராயர் - காடவர் + அரையர். காடவ அரசர்கள் எனப் பொருள்படும் காடவராயர்கள் காடவர் என்ற கள்ளர் இன அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றனர். சோழர் வரலாற்றில் விக்ரம சோழன் காலந்தொட்டு காங்கேயர் என்ற பட்டம் புனைந்த குறுநில அரச மரபினரின் (பட்டங்களின் விரிவாக்கமும் விளக்கங்களும்) செல்வாக்கு பெற்று வந்தனர். இப்பட்டங்கள் வழங்கியவர்கள் கள்ளர் குலமரபில் ஒரு பிரிவினர் என்று கூறுகின்றனர். ஆனால், வன்னியரில் ஒரு பிரிவினர் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். திருமுட்டம் மற்றும் விருதாச்சலம் கல்வெட்டுகள், 'காடவராயர்கள்' வன்னியர்களே (பள்ளி) என்று குறிப்பிடுகின்றன.

In a ghrimushnam inscription (ARE 1916 - 232) Kulothungachala kadavarayan, a kadavachief is stated as a Palli. (Page 137 & 139).

இதுபோன்று பட்டங்கள் பின்னாளில் சாதியாக உருவெடுத்ததைக் காண முடிகின்றது. ஏனாதியரும் தமிழ்நாட்டில் வாழுகின்ற 'சாணர்' வகுப்பினர் என்று குறிப்பிடுகின்றனர்.

ஈழத்தில் இருந்து வந்த சான்றோர் சமூகம் என்பது சான்றார் என வழங்கி, பின்பு சானார் என்று அழைக்கப்பட்டவர்கள். பிறகு, சாணார் என்று மருவியது, என்று கூறுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள் இந்தப் பனை விதைகளை கொண்டு வந்து, பனை மரங்களை உருவாக்கினர் என்றும் கூறி வருகின்றனர். பனைமரம் என்பது சங்க காலத்தில் இருந்தே இருக்கும் மரம் ஆகும். பாலைத்திணையின் கருப்பொருளில் ஒன்று. மேலும், 'நாடாள்வான்' என்பது 'நாட எவான்' என்று மாறியது போன்று, 'சான்றோர்' சாணராக மாறியிருக்கலாம். ஆயினும், 'ஏனாதி' என்பது சாணருக்கு வழங்கிய பட்டப்பெயர் என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஏனாதி நாயனார் புராணம் கூறுகின்ற கருத்துப்படி, 'ஏனாதி' என்பது வெறும் பட்டம் என்றாலும் ஆந்திரப் பகுதியின் எல்லையில் 'ஏனாதி' என்னும் இனக்குழுவே வாழுகின்றனர்.

'ஏனாதி' என்பதற்கான பட்டம் பெற்று போர்வீரர்களாக இன்று வாழ்கின்ற மக்களைப் பின்வருமாறு காணலாம்.

ஏனாதி என்பவர்கள் ஆந்திர தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் வாழுகின்ற பழங்குடிகள். இவர்கள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் இன்றும் வாழுகின்றனர். ஏனாதியர்கள் சங்க காலத்தில் இருந்து வாழ்ந்து வருகின்ற இனக்குழுக்கள் என்பதனை முன்னர் காண்டோம். இப் பழங்குடிகள் சங்க இலக்கியச் சான்றைக் கொண்டு காணும்பொழுது, தொண்டை மண்டலப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சான்றோர் உடைத்த தொண்டை மண்டலம் ஆந்திர எல்லைப் பகுதியையும் உள்ளடக்கியது. வேலூர், அரக்கோணம், திருத்தணி, பள்ளிப்பட்டு, எருமை வெட்டி பாளையம், அருங்குளம், ஜம்பாடா போன்ற பகுதிகளில் ஏனாதியர் வாழுகின்றனர். இம்மக்களின் உணவுப் பழக்கவழக்கம், சடங்குகள், கலைகள் வழிபாடுகள் போன்றவற்றை வைத்துப் பார்க்கின்ற பொழுது, இம்மக்கள் தமிழ்நாட்டின் பழங்குடிகளான இருளர் மக்களோடு பொருந்திச் செல்வதைக் காண முடிகின்றது.

ஏனாதிகள் தமிழ்நாட்டில் வாழுகின்ற பழங்குடிகள். இவர்கள் தன்னை, 'இருளர்கள்' என்றும் அழைத்துக் கொள்ளுகின்றனர். கள ஆய்வில் அரக்கோணம் மற்றும் கண்டிகை போன்ற பகுதிகளில் ஏனாதியர் தன்னை, 'இருளர்' என்று கூறுவதைக் காண முடிகின்றது.

## ஏனாதியர் தெய்வம் செஞ்சு

ஏனாதியர்கள் செஞ்சு என்னும் பெண் தெய்வத்தை வணங்கி வருகின்றனர். இத்தெய்வத்தைப் பற்றிய வாய்மொழிக் கதைகளை இன்று வரை கூறி வருகின்றனர்.

ஆந்திராவின் மேற்கு மலைத்தொடரின் தென்பகுதியில் வாழும் செஞ்சு பழங்குடி மக்கள் கடலோரப் பகுதிகளில் வாழும் ஏனாதிகள் மத்தியில் வேறு விதமாக புழக்கத்தில் உள்ளது. செஞ்சுக்களும் ஏனாதிகளும் ஒபிலீசா என்ற நரசிம்மனின் தீவிர பக்தர்கள். ஒரு செஞ்சு பழங்குடிப் பெண்ணை, அஹோபிய மலை நரசிம்மன் மயக்கி, வயப்படுத்தித் திருமணம் செய்து கொள்கிறான். பிறகு, அவளை செஞ்சுலட்சுமி ஆக்கி விடுகிறான். அதிலிருந்து செஞ்சுக்கள் அவரைத் தங்கள் மருமகனாக ஏற்றுக்கொண்டு, தொழ ஆரம்பிக்கிறார்கள் என்ற ஒரு தொன்மம் செஞ்சுக்களிடம் வழங்கி வருகின்ற கதையாகும்.

**“நரசிம்மன் பாடுகிறான்**
**தங்கப் பெண்ணே! வடிவழகே**
**உன்னைப் போல் இங்கே யாருண்டு**
**மயக்கும் உனது முகவழகில்**
**மயங்கி மறுகி நானிங்கே**
**காமன் சிததிதால் நிலையாக**
**கல்லாய் சமிந்து நிற்கிறேன்**
**பெண்ணே நீயும் ஏற்காமல்**
**ஏனோ விலகிச் செல்கிறாய்”**

என்று காதல் பாட்டு வடிவில் நரசிம்மனுக்கும் செஞ்சு லட்சுமிக்குமிடையே உள்ள பாடல் ஒன்று செஞ்சு பழங்குடிகள் இன்றும் ஆந்திர மாநிலத்தில் பாடுகின்றனர்.

நரசிம்மனுக்கும் செஞ்சு பதில் பாடும் பாடல்களும் இங்கு வழக்கத்தில் உள்ளன.

**“நீ யார் எனக்கு விலகிச் செல்**
**என்னிடம் மரியாதை காட்டு**
**அன்றேல் எங்கள் கூர் அம்பின்**
**ருசியை அறியப் போகின்றாய்**
**முண்டக் கண்ணா! சடை முடியா!**
**கோரப் பல்லா! குண்டையா!**
**உன்னைக் கண்டு பயமில்லை**
**ஓடிப்போ இக்கணமே”**

என்ற ஆந்திர நாட்டார் வழக்காற்றியல் பதிவு செய்துள்ளது. இதுபோன்று பல வாய்மொழிகள் இம்மக்களிடம் வழக்கத்தில் உள்ளது.

ஆந்திர எல்லைப் பகுதியான வேலூர், திருவள்ளூர், திருத்தணி, திருப்பதி மலையைச் சுற்றியும் இந்த ஏனாதிப் பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் செஞ்சு வழிபாடும் இருளர்களின் கன்னித் தெய்வ வழிபாட்டுடன் இயைந்து செல்கின்றன.

“கன்னி தெய்வத்திற்கு ஏழு கற்களை நெட்டு வைத்து வணங்குவது போன்று, செஞ்சு அம்மனுக்கும் ஏழு கற்களை வைத்து வழிபாடு செய்கின்றனர்”. திருத்தணி வட்டத்தில், ‘செஞ்சு’ என்னும் பெயரில் பல ஊர்கள் காணப்படுகின்றன. இதுபோன்று கடற்கரை ஓரங்களில் சில ஏனாதிகள் வாழ்கின்றனர். அதைப்பற்றிப் பின்வருமாறு,

ஏனாதி சமூகத்தினரை பீட்டர், இருளர் என்றே அழைத்தார். ஒருவேளை தமிழகத்தில் இருளர் என்று அழைக்கப்படுபவர்களே ஆந்திராவில், ‘ஏனாதிகள்’ என அழைக்கப்படுபவர்களாக இருக்கலாம் என எண்ணுகிறேன். ஏனாதிகள் இந்தியாவில் உள்ள பட்டியல் பழங்குடி இனத்தவர்கள். ஆந்திராவைச் சார்ந்த இவர்கள், ஆந்திர எல்லையில் இருக்கும் பழவேற்காடு பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இன்றும் வேட்டையாடிச் சேகரித்து உண்ணும் வழக்கம் கொண்ட இவர்களை சென்னை அரசு அருங்காட்சியகக் கண்காணிப்பாளராக இருந்த எட்கர் தர்ஸ்டன் என்பவர், ‘அனாதி’ என்கிற சமஸ்கிருதப் பெயரிலிருந்து, ‘துவக்கமே இல்லாதவர்கள்’ என ஊகிக்கிறார். ‘என்றும் இருப்பவர்கள்’ என்றும் பொருள் கொள்ளலாம்.

இவர்களைப் பற்றிய வாய்மொழிக் கதை, “ஒருமுறை இறை அடியவருக்கு உணவு வழங்கி, பசியாற்றிய போது அவர்களுக்குப் பாம்புகளை விரட்டும் வரத்தினை அந்த இறையடியவர் வழங்கியதாக ஏனாதிகள் குறித்த தொன்மக்கதையை ஏனாதிகள் கூறுகின்றனர்” என்றும் அவர்கள் பனை ஓலை இட்ட குடிசைகளிலே வாழ்வது, அவர்களது வாழ்விடம் பன்னெடுங்காலமாகவே பனை சார்ந்த நிலவியலை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது என்பதனை அறிய முடிகின்றது. (பனை முறைக் காலம் 12) பிரத்யேக அருட்பணி காட்சன் சாமுவேல்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் வேட்டைத் தொழில் செய்து வந்த வேட்டுவர்களே பிற்காலத்தில் சோழ, பாண்டியப் படைகளில் சேர்ந்து, ‘ஏனாதி’ எனும் பட்டம் பெற்று, குறுநில மன்னனாகவும் சிறந்த வாள் வித்தை வீரர்களாகவும் உருவாகி இருக்கலாம். காலமாற்றத்தின் காரணமாகவும், மன்னர்களின் ஆட்சி மாற்றத்தின் காரணமாகவும் பல்வேறு புலம்பெயர்வுகள் நடைபெற்று இருக்கலாம். வேட்டைச் சமூகமாக இருந்த

வேட்டுவர்கள், 'வில்லி' என்றும் 'ஏனாதி' என்னும் பட்டப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். 'வில்லி' என்று அழைக்கப்படும் இருளர்களுக்கும் 'ஏனாதி' என்று அழைக்கப்படும் இருளர்களும் தற்பொழுது மொழியால் வேறு பட்டுள்ளனர். எனினும் இவர்கள் ஒருவரே வழங்கப்பட்ட பட்டப்பெயர்கள் இவை என்பது இவர்களின் வழக்காறுகளை ஆராய்வதன் மூலம் அறியலாம்.

## துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியம் முழுவதும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,
2. லெக்ஸிகன், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
3. தொல்காப்பியம், சைவ சித்தாந்தம் நூற்பதிப்புக் கழக வெளியீடு, திருநெல்வேலி.
4. பெரிய புராண விளக்கம், கி. வ. ஜகநாதன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. கள ஆய்வுகள்.

## REFERENCES

1. Sangha literature throughout, New Century Book House, Chennai,
2. Lexicon, University of Chennai, Chennai.
3. Tolkappiyam, Saiva Siddhantham Publication Society, Tirunelveli.
4. Periyapuranam description, C. W. Jaganathan, Manivaskar Publishing House, Chennai.
5. Field Studies.